4. அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு மாலை சிற்றுண்டி வழங்கப்பெறுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு செய்தி, நாள்தோறும் மாலை நேரத்தில் அவை நடைபெறுகிறபொழுது உறுப்பினர்களுக்காக சிற்றுண்டி வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றும் சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பக்கத்திலுள்ள பழைய மேலவை அரங்கில் உங்களுக்காக சிற்றுண்டி காத்திருக்கிறது. எல்லோரும் உடனடியாகச் சென்றுவிட வேண்டாம். ஒவ்வொரு பிளாக்கிலேயும் இருக்கக்கூடிய ஒவ்வொரு வரிசையிலேயிருந்தும் ஒருவர் இருவராகச் சென்று சிற்றுண்டி அருந்தி வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : தலைவரவர்களே. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன? சிற்றுண்டியிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா ?

திரு. கே. பி. ராஜு : தலைவரவர்களே, இந்தச் சிற்றுண்டி காலையிலும் கிடைக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை நேரம் அவை நடைபெறும்பொழுதுதான் ஏற்பாடு செய்கிறோம். காலையிலே நீங்களே அருந்தி வருவீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

3. மானியக் கோரிக்கைகள், 1991–92 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. நா. சா. பழனிசாமி அவர்கள்.

பிற்பகல் 4.55

திரு. நா .சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கூட்டுறவே நாட்டுயர்வு '' என்ற உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையிலே, இந்தக் கூட்டுறவு அமைப்புகள் நம்முடைய தமிழ் நாட்டிலே உருவாக்கப்பட்டன. இந்தக் கூட்டுறவு அமைப்புகள், மற்றவர்களை விட, வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவர்களுடைய வேளாண்மைப் பணிக்கு ஒரு முக்கியமான ஸ்தாபனமாக தமிழ் நாட்டிலே விளங்கி வருகிறது. இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் உருவாகுவதற்கு முன்பாக, வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருந்தவர்களுக்கு, வட்டிக் கடையிலே இருந்துதான் கடன் பெற முடிந்தது. அந்த வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் பெற்ற காலத்திலே, வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டிருந்தவர்கள், அவர்கள் உழைத்த உழைப்பையெல்லாம் வட்டிக்காகவே செலவழித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றி, வங்கி